

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள உள்ளதையொட்டி கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரம் தேசிய நெடுஞ்சாலை அருகில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்காக அமைக்கப்பட்டு வரும் பந்தல் அமைத்தல் உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடன் இருந்தனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (19.12.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரித் துறை ஆணையர் எஸ்.நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகாத்மா காந்தியைக் கொன்றவர்கள் வழிவந்த நீங்கள்

# 100 நாள் வேலைத் திட்டத்தில் காந்தி பெயரை மாற்றுவது ஆச்சரியம் இல்லை!

## “திட்டத்தைச் சீர் குலைக்க வேண்டாம்” — நாடாளுமன்ற மாநிலங்களவையில் — கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் ஆவேச உரை!

நாமக்கல், டிச. 20 -

டெல்லியில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் குளிர்கால கூட்ட தொடர் நடைபெற்றிருக்கிறது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஏழை, எளியவரின் வாழ்வை சீர்குலைக்கும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை குறைக்கும் மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.

இக்கூட்டத்தொடரில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பேசியதாவது,

துணை தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் பிரதான இடத்தில் இருந்த மகாத்மா காந்தி சிலையை அகற்றிய நீங்கள் அவரை கொன்றவர் சார்ந்த இயக்கத்தில் வழி வந்த நீங்கள் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் அவரது பெயரை நீக்க முனைந்திருப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. தாய் திருநாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட மகாத்மாவின் புகழை இந்த நாட்டின் கடைசி உயிர் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

### மசோதா

பேரவை துணை தலைவர் அவர்களே இப்பொழுது நடைமுறையில் உள்ள MGNREGA சட்டப்பூர்வமாக வேலை கோரும் உரிமைகொண்ட திட்டம். ஆனால் புதிய VPGRamjiMasodha மசோதா ஒன்றிய அரசு மாநில அரசுக்கு நிதி ஒதுக்குவது நிபந்தனை ஆக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய விவசாய தொழிலாளர்களின் வேலை கோரும் உரிமையை அரசின் சலுகையாக மாற்றப்பட்டுள்ளது.



### 125 நாட்கள்

மேலும் இந்த புதிய மசோதாவில் அறுவடைக் காலம், விதைப்பு காலம் என்று கணக்கிட்டு அந்த நாட்களில் வேலை இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் மக்களவையிலே குறிப்பிடும் போது 125 நாட்கள் வேலை நாட்கள் அதிகரிக்கப்படும் என்று கூறுகிறார். விஞ்ஞானபூர்வமாக கிராமப்புறத்தில் உள்ள ஏழை கூலி விவசாய தொழிலாளர்களை ஏமாற்றுகிறது இந்த அரசு.

விதைப்பு மற்றும் அறுவடை காலத்தை கணக்கிட்டு ஆண்டிற்கு 60 நாட்கள் வேலை இல்லை என்று இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்களிலும் போதிய அளவிற்கு விவசாய பணிகள் நடைபெறுமா? வறட்சி காலத்தில் விவசாய பணிகள் நடைபெறுமா ? அதில் அனைவருக்கும் போதிய அளவு வேலை கிடைக்குமா! என்பதை இந்த அரசு சிந்திக்கவில்லை.

100 நாட்கள் என்பதை 50 நாட்களாக MGNREGA திட்டம் உங்களது கண்களை உறுத்தி கொண்டே இருந்தது. காங்கிரஸ் ஆட்சியில் திராவிட முன்னேற்ற கழகம் கூட்டணியில் அங்கம் வகித்த பொது 2005 ஆம் ஆண்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. நீங்கள் பிஜேபி ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து படிப்படியாக வேலை நாட்களை குறைத்தீர்கள். 100 நாட்கள் என்பதை 50 நாட்களாக 60 நாட்களாக குறைக்கப்பட்டது. இபொழுது அமைத்துள்ள முழுமையாக புதிய சட்டம் இத்திட்டத்தை சீர்குலைக்கிறது. ஏழை விவசாய தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்க வேண்டாம். ஒரு உதாரணத்தை நான் சொல்கிறேன் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு குறிப்பாக நான் சார்ந்த நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 40 லட்சம் மனித வேலை நாட்களாக இருந்தது. தற்போது அது 20 லட்சம் மனித வேலை நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை நீங்கள் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து உரிய காலத்தில் வழங்கவில்லை. இப்பொழுது கூட MGNREGA திட்டத்திற்கு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதி சுமார் ஏறத்தாழ ரூ.1900 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது.

### 100 சதவிகிதத்தை 60 சதவிகிதமாக குறைப்பு

தற்போது உள்ள 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் 100 சதவிகித நிதி ஒன்றிய அரசு வழங்கும். புதிய மசோதாவில் 60 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மீதி 40 சதவிகிதம் நிதி சுமையை மாநில அரசின் மீது ஏற்றப்பட்டுள்ளது.

இந்த சட்ட மசோதாவின் பிரிவு 5 உட்பிரிவு 4 மாநிலத்தின் பொருளாதார நிலையை வைத்து ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கிடு செய்யும் என கூறப்பட்டுள்ளது. அப்பொழுது பொருளாதாரத்தில் உயர்ந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுமா? அங்கு எல்லாம் ஏழை விவசாய தொழிலாளர்கள் இல்லையா?

மேலும் ஒரு மாநிலத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று ஒன்றிய அரசு தான் முடிவு செய்யும் என்று சொல்லப்படுகிறது.

### கிராம ஊராட்சியின் அதிகாரம் பறிப்பு

இப்பொழுது உள்ள சட்டத்தின் படி ஒரு கிராமத்தில் எவ்வளவு வேலை நாட்கள் வேண்டும் என்பதை கிராம சபை முடிவு செய்யும். ஆனால் இந்த மசோதாவில் கிராமத்திற்கு எவ்வளவு வேலை நாட்கள் வேண்டும் என்பதை ஒன்றிய அரசு கதி சக்தி PORTAL தான் முடிவு செய்யுமாம். இது கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்தை பறிக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் ஒன்றிய அரசாங்கம் 100 நாள்வேலைவாய்ப்புதிட்டத்தினை கைவிடப் பார்க்கிறது. தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு மசோதாவை கைவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

“கொலையிற் கொடியாரை வேந்தர்கண் காணின் நிலைகுலைந்து போகும் குடி” என உலக பொதுமறை திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. ஆட்சியாளர்கள் கொடுமையானவர்களாக (அநியாயம் செய்பவர்களாக) மாறினால், அந்த நாட்டின் மக்கள் வாழ்க்கை அழிந்து சீர்குலைந்து போய்விடும். அதனை உணர்ந்து இந்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தமது உரையில் குறிப்பிட்டார்.




தி.மு.க.

இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21.12.2025 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.12.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




இனமானப் பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் – மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் மலர் தூவி இனிப்பு வழங்கினார். உடன் டி.இராமகிருஷ்ணன், அருள்தாஸ், கே.பி.சுந்தரேசன், டி.சுந்தரம், எம்.பிரேம்குமார், புத்தகரம் எம்.சரவணன், அன்பில், மகேஷ், தே.ரமணன், சி.ஹரிஷ், சந்துரு, என்.சரவணன், சி,எல், உதயா, ஜெ.நரசிம்மன், எஸ்.வேலுசாமி, எழில் ராவணன், வடிவேலு, அன்பரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா - பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. – தமிழ்க் கேள்வி தி.செந்தில்வேல் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

*தாம்பரம், டிச.20-*

*தாம்பரம் மாநகர திமுக சார்பில் இளம் தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (20.12.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பாரதி திடல் சண்முகம் சாலை மேற்கு தாம்பரத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்..எல்ஏ., தலைமையில்*

*டி.காமராஜ், எஸ்.இந்திரன் வரவேற்புரையில் நடை பெறுகின்றது.*

*எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஜி.கே.ரவி, இரா.நரேஷ் கண்ணா, வ. விஜயரங்கன், பி.சதாசிவம் ஆகியோர் முன்னிலை வசிக்கின்றனர்.*

*இதில் கழக பொருளாளர் மக்களவை கழகக் குழுத்தலைவர் டி.ஆர். பாலு, தமிழ்க் கேள்வி ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இதில் தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தாம்பரம் தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, கழக பேச்சாளர் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.வேல்முருகண், சி. கே. ஜெகதீஸ்வரன், ஜனனி சுரேஷ், ரமணி ஆதிமூலம், இ.மனோகரன், இரா.விஜயகுமார், இரா ரத்தினகுமார், கோ.தேனுபுரி, எஸ்.கார்த்திக், வீ.கார்த்திக், ஆர்.அகஸ்டின், டி.கே.கோட்டி, கி. முத்துமாரன், லலித் தீபராஜன், ஜெ.சத்தியசீலன், ச. இராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன், இரா.செல்வகுமார், சுனில் மேத்யூ, மு தசரதன், டி.கே.தாமஸ், இரா. சிவகுமார், சி.சூர்யா, த. பூங்கோதை மற்றும் மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*தாம்பரம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்யபிரபு நன்றி கூறுகிறார்.*



சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் தலைமையில் 18.12.2025 அன்று மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் 16வது நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்/இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)
வழங்கும்





சூர்யபுத்திரன்
நாட்டிய நாடகம்

நாள்: 20.12.2025 சனிக்கிழமை — நேரம்: மாலை 05.30 மணி

வரவேற்புரை : திருமதி விஜயா தாயன்பன் அவர்கள், உறுப்பினர் - செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தலைமையுரை : திரு. வாகை சந்திரசேகர் அவர்கள், தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் / தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

சிறப்புரை : திரு. T.K.S.இளங்கோவன் அவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

வாழ்த்துரை : கலைமாமணி பிரியாமுரளி அவர்கள், நடனக் கலைஞர், தலைவர், அகில இந்திய பரதநாட்டியக் கலைஞர்கள் சங்கம்

திரு. மயிலை த.வேலு அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்

கலைமாமணி திரு. மதுரை முரளிதரன் - திருமதி சித்ரா முரளிதரன் குழுவினரின் நிருத்தியக்ஷேத்ரா நாட்டியப் பள்ளி வழங்கும்
சூரிய புத்திரன்
நாட்டிய நாடகம் நடைபெறும்.

அனைவரும் வருக!!

அன்புடன் அழைக்கும்... கலைமாமணி ஜாகிர் உசேன்
மாநில துணைச் செயலாளர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை